*9*

# வானங்கள் மற்றும் பூமியின் முடிவு

*"கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்" (2 பேது. 3:10).*

*மரித்தோரிலிருந்து எல்லா உடல்களும் உயிர்ப்பிக்கப்படுதல் மற்றும் பூமியில் உயிருடன் இருப்பவர்கள் யாவரும் எடுத்துக்கொள்ளப்படுதல் ஆகியவற்றுடன், பூமிக்கும் படைக்கப்பட்ட வானங்களுக்கும் என்ன நடக்கும்? சாத்தியக்கூறுகளைப் பற்றிப் பலர் வியப்படைகின்றனர்: "வானங்களும் பூமியும் தற்போதுள்ள இயல்பு நிலையில் தொடர்ந்து இருக்குமா?"; "பூமியானது ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததற்கு முன்பிருந்த தொடக்க காலப் பரதீசின் நிலைக்கு புதுப்பிக்கப்படுமா?"; "இது ஆவிக்குரிய உடல்களாக மாற்றப்பட்டவர்கள் வாழத் தகுதியான ஆவிக்குரிய வாழ்விடமாக மாற்றப்படுமா?"; "இது அழிக்கப்பட்டு கடந்து சென்று என்றென்றும் மீண்டும் இராதபடி ஆக்கப்படுமா?"*

*வானங்கள் மற்றும் பூமி ஆகியற்றின் முடிவைப் பற்றி நாம் கலந்துரை யாடுவதற்கு முன்பு, இந்த வார்த்தைகளினால் அர்த்தப்படுத்தப்படுவது என்ன என்பதை நாம் புரிந்துகொள்ளுதலை நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். "வானங்கள்" என்ற வார்த்தையானது shamayim என்ற எபிரெய வார்த்தை மற்றும் ouranos என்ற கிரேக்க வார்த்தை ஆகியவற்றின் மொழிபெயர்ப்பாகப் பயன்படுத்தப்படுகிறது. "பூமி" என்ற வார்த்தை erets என்ற எபிரெய மற்றும் ge என்ற கிரேக்க வார்த்தைகளின் மொழிபெயர்ப் பாகப் பயன்படுத்தப்படுகிறது.*

*"வானம்," "வானங்கள்," மற்றும் "ஆகாயம்"[1] ஆகியவை வேதாகமத்தில் மூன்று வட்டாரங்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன (2 கொரி. 12:2); (1) பூமியைச் சுற்றிலுமுள்ள வானவெளி (ஆதி. 11:4; 27:28;[2] லூக். 18:13); (2) ஆகாயத்துப் பொருட்கள் யாவற்றையும் கொண்டுள்ள படைக்கப்பட்ட அண்டம் (ஆதி. 1:1, 14-17; சங். 19:1);[3] மற்றும் (3) தேவன் தமது வானக சேனைகளுடன் வாசம் பண்ணுகின்ற நித்தியமான, உலகம் சாராத பரிமாணம் (ஆதி. 28:17; சங். 80:14; ஏசா. 66:1; மத். 5:12 ஆகியவற்றைக் காணவும்).*

*"பூமி" என்ற வார்த்தை நாம் வாழ்கின்ற இந்தக் கிரகத்தை அல்லது மண்,*

*நிலம் அல்லது தேசம் என்ற கருத்தமைவில் அது ஏற்படுத்தப்பட்டுள்ள பொருளைக் குறிப்பதற்கு மிகவும் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது. இது - மனிதகுலம், நாடுகள் மற்றும் மனித நிறுவனங்கள் உட்பட - பூமியில் குடியிருப்பவர்களை அல்லது இந்த உலகத்தின் பாவம் நிறைந்த தன்மையைப் பண்புபடுத்துவதற்கு வழக்கமாகக் குறிப்பிடுகிற "உலகம்" (கிரேக்கம்: kosmos) என்ற வார்த்தையாக எண்ணிக் குழப்பம் அடையக் கூடாது. "பூமி" மற்றும் "உலகம்" ஆகியவற்றிற்கு இடையில் ஒரு நல்ல நேர்மாறு 2 பேதுரு 3:5, 6ல் தரப்பட்டுள்ளது. படைப்பின்போது, "ஜலத்தினால் ஜலத்திலிருந்து" உண்டாக்கப்பட்ட பூமியல்ல, ஆனால் பழங்கால துன்மார்க்க உலகமான நோவாவின் காலத்தில் இருந்த "உலகம்" தான் அழிக்கப்பட்டது. உலகம் அதன் இச்சைகளுடன் கடந்து செல்லுகிறபோது (1 யோவா. 2:15-17), பூமிக்கும் வானத்திற்கும் இந்த அண்டத்திற்கும் என்ன நடக்கும்?*

## எதிரான விவாதங்கள்

*பூமியானது ஒழியாது ஆனால் என்றென்றைக்கும் நிலைத்து நிற்கும் என்று நம்புகின்றவர்கள் தங்கள் விவாதத்தை நிரூபிப்பதாகக் காணப்படும் பல்வேறு வசனப்பகுதிகளைக் குறிப்பிடுகின்றனர்: பிரசங்கி 1:4; ஏசாயா 45:18; மத்தேயு 5:5.*

*''சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள்" (மத். 5:5) என்ற கூற்று தற்கால பூமியை அல்ல ஆனால் எதிர்கால பூமியைக் குறிக்கிறது என்று நிரூபிப்பதற்கு, ஒருவர் இந்த பூமியானது என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் என்பதை முதலில் நிரூபிக்க வேண்டும். இந்த பூமி ஒழிந்துபோகும் என்று காண்பிக்கப்படக் கூடும் என்றால், இந்தக் கூற்றானது எதிர்காலத்தில் உள்ள பூமியை அல்ல ஆனால் இப்போது உள்ள பூமியையே குறிப்பிடுவதாக இருக்க வேண்டும்.*

*பூமியானது ''வீணாக'' அல்ல ஆனால் ''குடியிருப்பதற்கென்று'' படைக்கப்பட்டது என்கிற விவாதம் (ஏசா. 45:18;* KJV*), இது ஒருக்காலும் ஒழிந்து போகாது என்று நிரூபிப்பதில்லை. பூமியைப் படைத்தல் என்ற செயலானது வீணான முயற்சியாக இருந்ததில்லை, ஏனெனில் இது குடியிருப்பாக உள்ளது மற்றும் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இது குடியிருப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வசனமானது, பூமி ''என்றென்றைக்கும்'' குடியிருப்பாக இருக்கும் என்று கூறுவதில்லை யாதலால், இது பூமியானது ஒழிந்துபோகாது என்று நிரூபிப்பதில்லை.*

*பூமி ஒழிந்துபோகாது என்று நிரூபிப்பதாக உள்ளது பிரசங்கி 1:4ம் வசனப் பகுதியாகும், இது "ஒரு சந்ததி போகிறது, மறு சந்ததி வருகிறது, பூமியோ என்றைக்கும் நிலைத்திருக்கிறது" என்று கூறுகிறது (சங். 104:5ஐயும் காணவும்). சங்கீதம் 148:6ல், வானங்களும்கூட என்றென்றைக்கும் இருப்பதற்காகவே நிலைநாட்டப்பட்டன என்று குறிப்பிடப்படுகிறது. இவ்வசனப்பகுதிகள் கூறுபவையாகக் காணப்படுபவற்றை இவைகள் அர்த்தப்படுத்துகின்றன என்றால், வானங்களும் பூமியும் ஒருக்காலும்*

*ஒழிந்து போகாது என்ற கோட்பாடு நிரூபிக்கப்பட்டு விட்டது, விஷயம் முடிந்து போயிற்று என்றாகிறது; இருப்பினும், இந்த ஆதாரமானது இன்னும் நெருக்கமாகப் பரிசீலனை செய்யப்பட வேண்டும்.*

*இவ்வசனங்கள் நித்தியமான வானத்தையும் பூமியையும் பற்றிப் போதிக்காமல் இருக்கலாம்.* Olam *என்ற எபிரெய வார்த்தையானது ''என்றென்றைக்கும்'' என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (இது யெகோவா சாட்சிகளினால் பயன்படுத்தப்படுகின்ற புதிய உலக மொழி பெயர்ப்பு வேதாகமத்தின்படி, "எல்லையற்ற காலம்" என்பதாக உள்ளது), ஆனால் இது "ஒருக்காலும் முடிவு பெறாத" என்று எப்போதுமே அர்த்தப் படுவதில்லை, ஏனெனில் இது முடிந்து போன அல்லது முடியப் போகிற பல விஷயங்களைக் குறிப்பிடுகிறது.[4] Olam என்பது ''நித்தியத்திற்கும் இருத்தல்" என்பதை விட "தொடர்ந்து இருத்தல்" அல்லது "காலத்திற்குத் தாக்குப்பிடித்து இருத்தல்'' என்ற கருத்தை உள்ளடக்குகிறது. இந்த காரணத்தினால், மறைவாக உணர்த்தப்படுவது ஒரு காலகட்டத்திற்குத் தொடருமா அல்லது நித்தியத்திற்கும் தொடருமா என்பதைத் தீர்மானிப் பதற்கு நமக்குத் தகவல் தேவைப்படுகிறது. "என்றைன்றைக்கும்" என்பதை நாம், "நீ என்றென்றைக்கும் இதையே சொல்லிக் கொண்டிருக்கின்றாய்" அல்லது "அவர் என்றென்றைக்கும் இதைச் செய்து கொண்டிருக்கின்றார்" என்று கூறும்போது பயன்படுத்துகின்றோம். இப்படிப்பட்ட சொல் விளக்கங்களினால் நாம், இவைகள் நித்தியத்திற்கும் செய்யப்படும் என்று அர்த்தப்படுத்துவது இல்லை; மாறாக நாம், இவைகள் தொடர்ந்து செய்யப் படுகின்றன என்றே அர்த்தப்படுத்துகின்றோம்.*

*பின்வரும் வசனங்களில், "என்றென்றைக்கும்," "ஒருக்காலும் ஒழியாத," ''முழுமையான,'' அல்லது ''வாழ்வு முழுவதும்'' என்ற அர்த்தத்தில் சில பதிப்புகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள olam என்ற வார்த்தையானது நித்தியமானது என்று அர்த்தப்படுவதில்லை என்பது தெளிவு:*

*(1) விருத்தசேதன உடன்படிக்கை* olam *என்பதாக இருந்தது (ஆதி. 17:7, 8, 13, 19), ஆனால் அது இனியும் நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை (கலா. 5:2, 6; 6:15).*

*(2) பஸ்கா பண்டிகை* olam *என்பதாக இருந்தது (யாத். 12:14, 17, 24), ஆனால் அது கிறிஸ்தவர்களால் ஆசரிக்கப்படுகிற புதிய உடன்படிக்கையின் பண்டிகையாக இருப்பதில்லை.*

*(3) மனவிருப்பமுள்ள ஒரு எபிரெய அல்லது எபிரெயரல்லாத அடிமை தனது எஜமானருக்கு olam என்ற வகையில் ஊழியம் செய்ய வேண்டிய வராய் இருந்தார் (யாத். 21:6; லேவி. 25:45, 46ஐக் காணவும்); இருப்பினும், மரணத்திற்குப் பின்பு அந்த அடிமை தனது எஜமானரிடத்திலிருந்து விடுதலையானார் (யோபு 3:19).*

*(4) ஆரோனின் குமாரர்கள்* olam *என்ற வகையில் பரிசுத்தஸ்தலத்தைப் பராமரிக்க வேண்டியவர்களாகவும் ஆசாரியத்துவ உடுப்புக்களை உடுத்த வேண்டியவர்களாகவும் இருந்தனர் (யாத். 27:21; 28:43; 29:9ஐக் காணவும்). இது ஆசாரியத்துவத்தில் ஏற்பட்ட மாற்றத்துடன் முடிவடைந்தது (எபி. 7:12).*

*(5) ஆரோனின் குமாரர்கள் பலிகளில் ஒரு பகுதியை olam என்ற வகையில் பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர் (யாத். 29:28; லேவி. 7:34, 36). மிருக பலிகள் ஒழிந்து போயின.*

*(6) பாவநிவாரணத்திற்கான வருடாந்திர பலி olam என்பதாக இருந்தது (லேவி. 16:34). இது இனியும் நடைமுறைப்படுத்தப்படுவது இல்லை.*

*இந்தக் குறிப்புகள் மாதிரிகளாக மாத்திரமே உள்ளன, ஆனால் olam என்பது "ஒருக்காலும் முடிவடையாதது" என்ற கருத்தில் "என்றென்றைக்குமானது" என்று அர்த்தப்படுத்த வேண்டும் என்பது அவசியமில்லை என்பதைக் காண்பிப்பதற்கு இவைகள் போதுமானவையாக இருக்க வேண்டும். இது தேவனுக்குப் பயன்படுத்தப்படுவதுபோல் (யாத். 15:18; சங். 90:2) நித்தியமானதைக் குறிப்பிடப் பயன்படுத்தக் கூடியதாக இருக்கையில், மற்ற வசனப்பகுதிகள் olam என்பது முடிவடையும் என்பதைக் காண்பிக்கின்றன. அந்த விஷயங்களில், olam என்பது "தொடருகிற" அல்லது "காலத்திற்குத் தாக்குப் பிடித்து இருத்தல்" என்ற வகையில் இருப்பதாக நினைக்கப்பட வேண்டும், ஆனால் "நித்தியத்திற்கும்" என்று அல்ல. வானமும் பூமியும் ஒழிந்துபோகும் என்று வேதாகமம் கூறுகிறது என்றால், olam என்பது வானமும் பூமியும் "நித்தியமானது" என்பதை அல்ல ஆனால் "காலத்திற்குத் தாக்குப்பிடித்து இருத்தல்" என்பதைக் குறிப்பதாக நினைக்கப்பட வேண்டும்.*

## *சார்பான விவாதங்கள்*

*வானங்களும் பூமியும் ஒழிந்துபோகும் என்று வேதாகமம் போதிக்கிறது. இருப்பினும், பழைய ஏற்பாட்டில் இந்தப் பாடக்கருத்தைப் பற்றிச் சிறிதளவே கூறப்பட்டுள்ளது. ஆதியாகமம் 8:22, பூமியானது என்றென்றைக்கும் இராது என்ற கருத்தை மறைமுகமாய் உணர்த்துவதாக இருக்கலாம்:*

> *பூமியுள்ள நாளளவும்,*
> *விதைப்பும் அறுப்பும்,*
> *சீதளமும் உஷ்ணமும்,*
> *கோடைகாலமும் மாரிகாலமும்,*
> *பகலும் இரவும்*
> *ஒழிவதில்லை.*

*பூமியானது என்றென்றைக்கும் நிலைநிற்கப் போகிறது என்றால், இவ்வசனப்பகுதியானது இவைகள் ஒருக்காலும் ஒழியாது என்று கூறுகிறது. பூமியானது நித்தியமாக இருக்கப் போவதில்லை என்றால், இவைகள் அது இருக்கும் வரையிலும் தொடரும் என்று கூறுகின்றன. பூமியின் முடிவு என்பது இவ்வசனத்தில் மறைமுகமாய்க் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.*

*சங்கீதம் 102ல் இருந்து, புதிய ஏற்பாட்டில் (எபி. 1:10-12) மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ள ஒரு வசனப்பகுதி பின்வருமாறு கூறுகிறது:*

*நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர், வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது. அவைகள் அழிந்துபோம், நீரோ நிலைத்திருப்பீர், அவைகளெல்லாம் வஸ்திரம்போல் பழமை யாய்ப்போம், அவைகளை ஒரு சால்வையைப்போல் மாற்றுவீர், அப்பொழுது மாறிப்போம். நீரோ மாறாதவராயிருக்கிறீர், உமது ஆண்டுகள் முடிந்துபோவதில்லை (சங். 102:25-27;* RSV*)).*

*இவ்வசனப் பகுதியானது, வானங்களும் பூமியும் (1) அழியும், (2) பழமையாய்ப்போம், (3) சால்வையைப் போல் மாற்றம் அடையும், மற்றும் (4) மாறிப்போம் என்று உறுதிப்படுத்துகிறது. "அழியும்" என்பது, "மெழுகு அக்கினிக்கு முன் உருகுவதுபோலத் துன்மார்க்கர் தேவனுக்குமுன் அழிவார்கள்" (சங். 68:2) என்ற கூற்றில் உள்ளதுபோல் "அழிக்கப்படுதல்" அல்லது "பாழாகுதல்" என்று அர்த்தப்படுகிற abad என்ற வார்த்தைக்கான மொழிபெயர்ப்பாக உள்ளது. மெழுகு உருகும்போது, இது எரிந்து அழிக்கப்படும்; இதே விஷயம்தான் துன்மார்க்கரின் உடல்களுக்கும் நடக்கும். இதுவே நாட்கள் முடிந்துபோகாதவராக இருக்கின்ற தேவனுக்கு நேர்மாறான வகையில் வானத்திற்கும் பூமிக்கும் நடப்பதாக உள்ளது.*

*இவ்வசனப்பகுதி, "அவைகளை ஒரு சால்வையைப் போல் மாற்றுவீர்" (சங். 102:26;* RSV*) என்று கூறுகிற காரணத்தினால், வானமும் பூமியும் முடிவுக்கு வரும் என்று போதிப்பதற்குச் சிலர் இவ்வசனப்பகுதியைப் புரிந்து கொள்ளாதிருக்கின்றனர். இதை அவர்கள், வானமும் பூமியும் புதுப்பிக்கப் படும், ஒரு வித்தியாசமான உருவத்திற்கு மாற்றப்படும் என்று அர்த்தப் படுவதாக எடுத்துக் கொள்கின்றனர். இருப்பினும், வசனம், "அவைகளை ஒரு சால்வையைப் போல மாற்றுவீர்" என்று கூறுகிறது. பழமையாய்ப் போன உடைகளை ஒருவர் மாற்றும்போது என்ன செய்கின்றார்? அவர் அவற்றை ஒழித்துப் போடுகின்றார். வானங்களும் பூமியும், மாற்றப்படும் போது, நீக்கப்பட்டு, ஒழிக்கப்பட்டு பின்பு பதிலாக வேறொன்று வைக்கப் படுகிறதான உடையைப் போல் மாறிப்போகும்.*

*யெகோவா சாட்சிகள் பயன்படுத்துகின்ற மொழிபெயர்ப்பானது (புதிய உலக மொழிபெயர்ப்பு) அவர்கள் போதிக்கின்றவற்றிற்கு நேர் மாறானதாயிருப்பினும், அது இவ்வசனத்தை, "அவைகள் அழிந்துபோம், ஆனால் நீரோ நிலைநிற்பீர்; அவைகள் யாவும் ஒரு வஸ்திரம்போல் பழமையாய்ப்போம். அவைகளை நீர் ஒரு உடையைப் போல் மாற்றுவீர், அவைகள் யாவும் முடிந்துபோம்" என்று தரவழைக்கிறது (சங். 102:26). இவ்வசனம், வானங்களும் பூமியும் அழிந்து, கடந்து போகும், மற்றும் மாற்றப்படும் என்று போதிக்கிறது.*

*இந்த ஆய்வுக்கருத்தைப் புதிய ஏற்பாடு மேற்கொள்ளுகிறது. இயேசு, ''வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" என்று கூறினார் (மத். 24:35). இயேசு, "வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப்பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்" என்றும் கூறியிருப்பதால் (லூக். 16:17) சிலர் இந்த போதனையை மென்மைப்படுத்த முயற்சி செய்கின்றனர். இவ்வசனத்தின் அடிப்படையில், இயேசு இதே விஷயத்தையே மத்தேயு*

*24:35ல் அர்த்தப்படுத்தினார் என்று அவர்கள் முடிவு செய்கின்றனர்: அதாவது அவரது வார்த்தைகள் ஒழிந்து போவதைக்காட்டிலும் வானங் களும் பூமியும் ஒழிந்துபோவது சுலபமாயிருக்கும். இருப்பினும், இவைகள் ஒரே விதமான கூற்றுக்களாக இருப்பதில்லை, இவைகள் ஒரே விதமான காட்சி அமைவில் கூறப்படவும் இல்லை. ஆகையால், இவை ஒவ்வொன் றும், தனித்தனியே கூறுகிற விஷயத்தைப் புரிந்துகொள்ள வேண்டும், மற்றும் ஒரு கூற்று கூறும் விஷயமானது இன்னொன்றைத் தகுதிப்படுத்தப் பயன்படுத்தப்படக்கூடாது. படைக்கப்பட்ட வானங்களும் பூமியும் ஒழிந்துபோகும் என்று மாத்திரமே இயேசு கூறினார். நமது கர்த்தருக்கு நேர்மாறாக இருக்கும்போது எவராவது சரியானவராக இருக்க முடியுமா?*

*இயேசு செய்ததுபோல் இதே சத்தியத்தைப் பவுல் போதித்தார். அவர், “மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கி யிருக்கிற நமக்கு, ... ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமான வைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்” என்று எழுதினார் (2 கொரி. 4:17, 18). பவுல் என்றென்றைக்கும் நிலைத்திராதவைகளை - காணப்படுகிறவைகளை - நித்தியமானவைகளுடன் - காணப்படாதவை களுடன் - நேர்மாறாக ஒப்பிட்டார். காணப்படக்கூடிய பூமி உட்பட பொருளால் ஆன இந்த அண்டம் முழுவதும் காணப்படக்கூடியதாக உள்ளது; ஆகையால் இது தற்காலிகமானதாக/அநித்தியமானதாக உள்ளது.[5] ஆவிக்குரியவைகள் காணப்படாதவைகளாக உள்ளன; ஆகையால் அவைகள் நிரந்தரமானவைகளாக நித்தியமானவைகளாக உள்ளன.*

*எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் ஆகாய் தீர்க்கதரிசனக் கூற்றை மேற்கோள் காண்பித்து, பின்பு தேவனுடைய வாக்குத்தத்தத்தை விளக்கப்படுத்தினார்:*

> *“அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று. இன்னும் ஒருதரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார். இன்னும் ஒருதரம் என்கிற சொல்லானது அசையாத வைகள் நிலைத்திருக்கத்தக்கதாக, அசைவுள்ளவைகள் உண்டாக்கப் பட்டவைகள்போல மாறிப்போம் என்பதைக் குறிக்கிறது” (எபி. 12:26, 27).*

*இவ்வசனத்தின்படி, அசைக்கப்படக்கூடியவைகள் - படைக்கப் பட்டவைகளான வானமும் பூமியும் - நீக்கப்படும்.*

*2 பேதுரு 3:7-13 வசனப்பகுதியானது வானங்கள் மற்றும் பூமி ஆகியவை ஒழிந்துபோவதை பற்றி முழுமையான விவரிப்பைத் தருகிறது: “இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அந்த வார்த்தையினாலேயே அக்கினிக்கு இரையாக வைக்கப்பட்டு'' (வ. 7); ‘‘வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்”[6] (வ. 10); “இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிறபடியால்” (வ. 11); “வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்” (வ. 12).*

வெளி. புத்தகமானது, "பின்பு, நான் பெரிய வெள்ளைச் சிங்காசனத்தையும் அதின்மேல் வீற்றிருக்கிறவரையும் கண்டேன், அவருடைய சமூகத்திலிருந்து பூமியும் வானமும் அகன்றுபோயின, ..." (வெளி. 20:11); "பின்பு, நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன், முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின, சமுத்திரமும் இல்லாமற் போயிற்று" (வெளி. 21:1) என்று கூறுவதன் மூலம், பூமியின் முடிவு பற்றிய விவாதத்தை முடித்து வைக்கிறது. முதலாவது என்னப்படுகிற, தற்போதுள்ள வானமும் பூமியும், தொடக்க காலப் பரதீசு நிலைக்கு தங்கள் பழைய நிலையை அடையும்படி புதுப்பிக்கப்படாது அல்லது இது ஆவிக்குரிய குடியிருப்பாக மாற்றப்படாது. அவை எரிந்து அழிந்துபோம். தேவன் இவற்றைப் புதுப்பிப்பதாகக் கூறவில்லை. யோவான், "சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: 'இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன்' என்றார்" (வெளி. 21:5) என்று பதிவு செய்தார். தேவன் ஒரு புதிய, உலகம் சாராத குடியிருப்பு ஒன்றை ஆவிக்குரிய ஜீவிகளுக்குத் தருவார் (1 கொரி. 15:44).

## முடிவுரை

தேவன் இந்த பூமியைக் குடியிருப்புக்கென்றே படைத்தார். அவர் தமது மகிமையை அறிவிப்பதற்கென்று (சங். 19:1) மற்றும் அடையாளங்களுக்காகவும் பருவங்களுக்காகவும் (ஆதி. 1:14) வானங்கள் இருக்கும்படி கொண்டுவந்தார். இந்த அண்டமானது, வடிவமைப்பில் ஒழிந்துபோகாததாகக் காணப்பட்டாலும், இது பயன்படுத்தித் தீர்க்கப்படக்கூடியதும் பற்றி எரியக்கூடியதுமான கட்டுமானப் பொருட்களினாலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது. வான்வீதி மண்டலங்களிலும் விண்மீன்களிலும் மற்றும் பூமியிலும் இருந்து தேவன் சக்தியை விடுவிக்கும்போது, உலகம் சார்ந்த எல்லாப் பொருட்களும் முடிவடையும். அந்த வேளையில் இவை யாவும் பெருத்த சத்தத்துடன் மறைந்துபோகும். நோவாவின் நாட்களில் இருந்த உலகத்தை ஜலப்பிரளயத்தினால் அளிப்பதாகக் கூறியிருந்த தமது வாக்குத்தத்தத்தைத் தேவன் நிறைவேற்றிய விஷயமானது, தற்போதைய வானங்களையும் பூமியையும் அவர் அக்கினியினால் அழிப்பதாகக் கூறியுள்ள வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுவார் என்பதற்கு ஆதாரப்பூர்வமான சாட்சியமாக உள்ளது (2 பேது. 3:5-7). அண்டத்தின் உலகப்பிரகாரமான தற்போதைய உண்மை நிலைகள் யாவையும் முடிந்துபோகும், மற்றும் நித்தியமான, ஆவிக்குரிய பரிமாணமானது மீண்டுமாக இருக்கும் ஒரே விஷயமாகும்.

நமக்கு, "இப்படி இவைகளெல்லாம் அழிந்து போகிறதாயிருக்கிறபடியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும், தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்! தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்" என்று புத்திகூறப்பட்டுள்ளது (2 பேது. 3:11, 12).

குறிப்புகள்

[1]NASB, NIV *முதலிய வேதாகமங்களில் சில வேளைகளில்* "Sky" *என்பது பயன் படுத்தப்பட்டுள்ளது.* [2]*ஆதி. 7:23; 8:2 ஆகிய வசனங்களையும் காணவும்.* [3]*அப். 2:19ஐயும் காணவும்.* [4]Olam *என்ற வார்த்தை பற்றிய மற்ற கலந்துரையாடலுக்கு இந்தப் புத்தகத்தில் "நித்திய வெகுமதி மற்றும் தண்டனை" என்ற பாடத்தில் காணவும்.* [5]"Temporal" *என்பதற்கான கிரேக்க வார்த்தையான* proskairos *வேறொரு இடத்தில் (மத். 13:21; மாற். 4:17)* "temporary" *என்றும் மற்றும் ஒரு இடத்தில் (எபி. 11:25)* "passing" *என்றும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.* [6]*பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் வசனம் 10ல்* "discovered" *என்றுள்ளது, புதிய உலக மொழிபெயர்ப்பிலும் இவ்வாறே வாசிக்கப்படுகிறது. கையெழுத்துப் பிரதிகளின் ஆதாரத்தின் அடிப்படையில், அது* "discovered" *என்றே இருந்தாலும், "எரிந்துபோகும்" என்பதற்குப் பதிலாக அது நியாயப்படுத்தப்படுகிறது (2 பேது. 3:10), இவ்வசனப்பகுதிகளில் உள்ள மற்ற கூற்றுகள், பூமி உட்பட இந்த அண்டமானது எரிந்துபோகும் என்பதை நிரூபிக்கின்றன.* "Discovered" *என்பது "எரிந்து போகுதல்" என்பதைக் காட்டிலும் வேத வசன ஆதாரம் அதிகம் உள்ள தென்று நிரூபிக்கப்படக் கூடுமென்றால், மற்ற கூற்றுக்களுக்கு நேரெதிராக இருப்பதைத் தவிர்ப்பதற்கு, அக்கினியானது பூமியின் பொருளினுடைய வடிவமைப்பை வெளிப்படுத்தும் என்ற விளக்கம் தேவைப்படுகிறது. பூமி நித்தியமானது என்று மனிதர் நினைத்திருப்பினும் இது தற்காலிகமானதாக, பூமி எரிக்கப்படும்போது "கண்டறியப்படும்" எரியும் தன்மையுள்ளதாகவே இருக்கிறது.*